கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
22, ராஜா முத்தையா சாலை, சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

.......

முன்னிலை : மேஜர்.வி.எஸ்.ஜெயகுமார் (ஓய்வு),
கூடுதல் இயக்குநர்.

இருப்பிடம் : சென்னை – 600 003.

.......

செயல் முறை ஆணை எண்.4173/2019/நிர்1 நாள். 19.01.2021

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி –(முன்னாள் படைவீரர் நலத் துறை) – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018ம் ஆண்டுகளுக்கான தொகுதி-IV போட்டித் தேர்வு – முன்னாள் படைவீரர் நலத் துறை அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்தல் – ஆணைகள் வழங்குதல் – தொடர்பாக.

சுட்டு :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதம் எண்.1021/ PSD-G2/2019, நாள்.13.02.2019 மற்றும் 30.03.2019.
2. இணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணை எண்.4173/2019/நிர்1, நாள்.31.05.2019.
3. திருவள்ளூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநரின் கடித எண்.1702/2019/அ1, நாள்.26.12.2020.

*********

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தற்காலிகமாக தெரிவு செய்து, முன்னாள் படைவீரர் நலத் துறை அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு சுட்டு (2)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தற்காலிக இளநிலை உதவியாளராக நியமன ஆணைகள் வழங்கப்பட்ட கீழ்குறிப்பிட்ட பணியாளரின் பணியினை, இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை உதவியாளரின் பெயர் திரு/திருமதி/செல்வி | பணிபுரியும் அலுவலகம் | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | வெ. கௌதமன் | உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம். | 13.06.2019 பிற்பகல் |

......2

2. சுட்டு (1)-ல் காணும் 13.02.2019 நாளிட்ட தேர்வாணையக் கடிதத்தில் பத்தி 5-ல் குறிப்பிட்டுள்ளவாறு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியாரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 13.06.2019 பிற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

> "The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination - IV for the year 2015-2016, 2016-2017 and 2017-2018 recruitment".

3. மேற்கண்ட பணியாளரின் பணி, இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனியர் பணியேற்பு செய்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்தில் இரண்டு ஆண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

4. தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்க்குறிப்பிட்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1. தமிழ் நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் .
2. பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி.

5. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம், தனியரின் பணிப் பதிவேடு மற்றும் பணிவரன்முறை செய்திடும் பதிவேட்டிலும் உரிய பதிவுகள் செய்திடுமாறு திருவள்ளூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இச்செயல் முறை ஆணை பெற்றமைக்கு ஏற்பளிப்பு செய்திடல் வேண்டும்.

(ஒம்)/- வி.எஸ்.ஜெயகுமார்.
கூடுதல் இயக்குநர்.

பெறுநர்

வெ. கௌதமன்
இளநிலை உதவியாளர்,
முன்னாள் படைவீரர் நல அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

- உதவி இயக்குநர் மூலமாக.

<u>நகல்:</u>

1. இயக்குநரின் நேர்முக உதவியாளர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை-03
2. உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்
3. நிர்வாகம்-3 பிரிவு.
4. முதன்மை ஆணைத் தொகுப்பு.
5. இருப்பு கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

19/01/2021
19/1/2021